தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
ஆணை எண். 51/பேரூ/2021
நாள் 13.10.2021

திரு. D. பால்கிருபாகரன்,
நெய்க்காரப்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நெய்க்காரப்பட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி, ஜீவவழி சர்ச், பழனி மெயின் ரோடு, நெய்க்காரப்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. D. பால்கிருபாகரன் என்பவரின் 05.03.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.7.2021ல் பெறப்பட்டு 51/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி, ஜீவவழி சர்ச், பழனி மெயின் ரோடு, நெய்க்காரப்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. D. பால்கிருபாகரன் என்பவர் தமது 9.6.2021 நாளிட்ட மனுவில் நெய்க்காரப்பட்டி பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் கடந்த 12.01.2011–ல் குடிநீர் இணைப்பு பெறுவதற்கு மனு அளிக்கலாமென்றும், அதற்கு ரூ.100/– வங்கி வரைவாணை (Demand Draft) இணைக்கப்படவேண்டுமென்று அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றும், அதன் பேரில் தான் குடிநீர் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பம் மற்றும் ரூ.100/–க்கான வங்கி வரைவாணையையும் இணைத்து மனு செய்ததாகவும், ஆனால் இதுநாள் வரை எந்தவித நடவடிக்கையும் இல்லாத காரணத்தினால், தான் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குப் போட்டு, நீதிமன்றத்தால் 03.03.2015–ல் இணைப்பு கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில், 22.9.2017 அன்று நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் குடிநீர் இணைப்புக்கு டெபாசிட் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

செலுத்துமாறு கூறினார் என்றும், அதனடிப்படையில் கடந்த 05.10.2017–ஆம் தேதியன்று டெபாசிட் தொகை ரூ.10,000/–ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தான் செலுத்தியதாகவும், அதனைத் தொடர்ந்து சாலையை வெட்டி குழாய் பதிப்பதற்கு நெடுஞ்சாலைத்துறையிடம் 01.11.2017 அன்று ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வங்கி வரைவாணை மூலம் செலுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து சாலையை வெட்டி குழாய் பதித்து அனைத்து வேலைகளும் முடிந்த நிலையில், குடிநீர் இணைப்பு கொடுப்பதற்கு காலதாமதம் செய்கிறார்கள் என்றும் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.1680/2018/ஆ3 நாள் 09.02.2018 மூலம் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், அதைத் தொடர்ந்து அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை கடிதம் ந.க.எண்.4419/பே.2/2018–1 நாள் 9.3.2018–ல் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், மேலும் மாநில சிறுபான்மை ஆணையத் தலைவர் கடிதம் ந.க.எண்.45/2018/A1 நாள் 9.2.2018–ல் இந்த மனுமீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரைசெய்தும், மீண்டும் தான் பழனி கோட்டாட்சியருக்கு மனு செய்ததாகவும், அம்மனு கடந்த 15.7.2020–ஆம் நாளிட்ட ஒ.மு.4218/2020/அ3 கடிதம் மூலம் பழனி வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டி அனுப்பப்பட்டும் இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் இல்லாது காலதாமதமாய் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த 03.03.2015 அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை குடிநீர் குழாய் இணைப்பு வழங்க உத்தரவிட்டு 6 வருடங்கள் கடந்த நிலையிலும், தமக்கு குடிநீர் இணைப்பு வழங்காமல் கையூட்டு பெற்றுக்கொண்டு 20 நபர்களுக்குமேல் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கியுள்ளார்கள் எனவும், ஒரு வீட்டுக்கு இரண்டு குடிநீர்குழாய் இணைப்பு என 30 வீடுகளுக்குமேல் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது சட்டத்திற்கும், நீதிக்கும் புறம்பான செயலாகும் என்றும், மேற்படி பேரூராட்சி நிர்வாகத்தினரின் செயலால் தன்னைப்போன்ற நபர்கள் புதிய குடிநீர் குழாய் இணைப்பு பெறமுடியாமல் மிகுந்த கஷ்ட நஷ்டத்திற்கு ஆளாகும் சூழ்நிலை உள்ளது என்றும், மேற்படி செயலால் குடிநீர் குழாய் இணைப்பு இல்லாமல், தனது குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டு குடிநீரை பணம்கொடுத்து வாங்கும் சூழ்நிலை இருந்து வருகிறதென்றும், எனவே தமக்கு நெய்க்காரப்பட்டி பேரூராட்சியிலிருந்து குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட உரிய விசாரணை மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 9.8.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் நெநயக்காரபட்டி பேரூராட்சியில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக பேரூராட்சிக்குட்பட்ட கே.வேலூர் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நத்தம் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகிறதென்றும், மேற்காணும் பணி முடிவுற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணி பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்த பின்னர் முன்னுரிமை அடிப்படையில் மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

3. நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 23.09.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 7.9.2021 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

மனுதாரர் திரு. D. பால்கிருபாகரன் அளித்துள்ள வாக்குமூலத்தில் "திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சியில் வசிக்கும் நான் எனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்கிடக்கோரி பேரூராட்சி அலுவலகத்தில் 2011–ல் விண்ணப்பித்திருந்தேன். குடிநீர் இணைப்பிற்கான விண்ணப்பத் தொகையான ரூ.100/–ஐ (ரூபாய் நூறு மட்டும்) பேரூராட்சியில் செலுத்தியுள்ளேன். ஆனால் அதற்கான ஆதாரம் தற்போது இல்லை. மேற்கண்ட கட்டணங்களை பேரூராட்சிக்கு செலுத்தியுள்ள நிலையில் எனக்கு இதுநாள்வரை குடிநீர் இணைப்பு வழங்காமல் காரணம் ஏதும் தெரிவிக்காமல் பேரூராட்சி அலுவலர்கள் காலதாமதம் செய்து வருகின்றனர் என்பதை இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன். எனக்குப் பின்பு குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்து பணம் செலுத்திய சுமார் 20 நபர்களுக்கு ஒரு வீட்டிற்கு இரண்டு குடிநீர் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 11 ஆண்டுகளாக மேற்கண்ட வீட்டிற்கு சொத்துவரி செலுத்திவரும் நான் குடிநீர் வசதி இல்லாமல் மிகுந்த சிரமப்படுவதால், விரைவில் குடிநீர் இணைப்பு வழங்கிட உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 23.9.2021 அன்று இம்முறைமன்ற விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சிப் பகுதியில் திரு. டி. பால்கிருபாகரன் என்பவர் வசிக்கும் கதவு எண்.2F என்ற வீட்டிற்கு வரிவிதிப்பு எண்.1902–ல் வரி விதிப்பு செய்யப்பட்டது. குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ள மேற்கண்ட மனுதாரருக்கு பேரூராட்சியின் மூலம் குடிநீர் இணைப்பு வழங்க முற்பட்டபோது அங்குள்ள சிலர் எதிர்ப்பு தெரிவித்ததால், குடிநீர் இணைப்பு வழங்க முடியவில்லை. சட்டம் ஒழுங்கு பிரச்சனையை கருத்திற்கொண்டு மேற்படி நபருக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சட்டவிதிகளுக்கு உட்பட்டு குடிநீர் இணைப்பு வழங்கிட பேரூராட்சியின் மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்கின்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்கிறேன். இந்நேர்வு தொடர்பாக எனது 22.9.2021 நாளிட்ட அறிக்கையினை இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 22.9.2021 நாளிட்ட அறிக்கையில் திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி பகுதியில் திரு. D. பால்கிருபாகரன் என்பவருக்கு சுமார் 12 வருடங்களுக்கு முன் கதவு எண்.2F என்ற வீட்டிற்கு பேரூராட்சியால் வரிவிதிப்பு எண்.1902–ல் வரிவிதிப்பு செய்யப்பட்டது. குடிநீர் இணைப்பிற்கு செலுத்துச் சீட்டு எண்.204 நாள் 05.10.2017–ல் முன்வைப்புத் தொகையாக ரூ.10,000/–ம் (ரூபாய் பத்தாயிரம் மட்டும்), செலுத்துச் சீட்டு எண்.213 நாள் 09.10.2017

அன்று சென்டேஜ் கட்டணமாக ரூ.2,700/–ம் (ரூபாய் இரண்டாயிரத்து எழுநூறு மட்டும்) செலுத்தியுள்ளார்.

மேலும், அப்போதைய செயல் அலுவலரால் மனுதாரரின் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டநிலையில், இந்து முன்னணி அமைப்பினர் நெய்க்காரப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 8–வது வார்டில் மில் ரோட்டில் பால்கிருபாகரன் என்பவர் சட்டத்திற்கு புறம்பான வகையில் போலி ஆவணங்கள் மூலம் இந்துக்களின் சிறுவயது குழந்தைகள் இறந்தால் அவர்களை அடக்கம் செய்யும் (புள்ளக்குழி) சுடுகாட்டிற்கு அருகில் இடம் வாங்கியுள்ளார். அந்த இடத்தில் சட்ட விதிகளுக்குப் புறம்பாக ஜீவ வழி சபை என்ற பெயரில் சர்ச் அமைத்து மதப்பிரச்சாரம் செய்து வருகிறார். அந்த இடத்தில் பேரூராட்சி நிர்வாகம் குடிநீர் இணைப்பு வழங்குவதாக கேள்விபட்டுவருகிறோம். எனவே, தாங்கள் மேற்கண்ட நபருக்கு குடிநீர் இணைப்பு மற்றும் சொத்துவரி நீக்க நடவடிக்கை எடுக்குமாறு அந்த அமைப்பினர் கேட்டுக்கொண்டனர். மேலும், அனுமதி இல்லாத சர்ச் அமைத்து, பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பதால் அவர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென கடிதம் வரப்பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ முறையீட்டு மனுவிற்கு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தற்போதைய செயல் அலுவலர் சம்மந்தப்பட்ட இடத்தினை ஆய்வு செய்ததில், மனுதாரர் குடியிருப்பிற்காக வழங்கப்பட்ட வீட்டுவரி இரசீதினை வைத்துக்கொண்டு அந்த இடத்தில் ஜீவவழி சபை என்ற பெயரில் சர்ச் அமைத்துள்ளதாகவும், மேலும் மேற்படி சர்ச் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறாமல் உள்ளதாக தெரியவருகிறதென்றும், சட்டம் ஒழுங்கு பிரச்சனையைக் கருத்திற்கொண்டு மேற்காணும் நபருக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம், செயல் அலுவலர், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி அவர்களது விளக்க அறிக்கை, வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் நெய்க்காரப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட மில் ரோடு கதவு எண்.2F என்ற வீட்டிற்கு சுமார் 12 வருடங்களுக்கு முன்னரே நெய்க்காரப்பட்டி பேரூராட்சியின் வரிவிதிப்பு எண்.1902 மூலம் வரிவிதிப்பு செய்யப்பட்டு, முறையாக சொத்துவரி செலுத்தி வருகிறார். தமது குடியிருப்பிற்கு குடிநீர் இணைப்பு கோரி விண்ணப்பித்து, அதற்கான கட்டணம் ரூ.100/–ஐ (ரூபாய் நூறு மட்டும்) 12.01.2011–ல் செலுத்தியமைக்கான வங்கி வரைவாணை (Demand Draft) நகலினையும் தமது புகார் மனுவுடன் இணைத்துள்ளார். பேரூராட்சி நிர்வாகத்தினால் மனுதாரர் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்காத நிலையில், மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த W.P (MD) No.2862 of 2015 வழக்கில் 03.03.2015–ல் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை பின்வருமாறு ஆணையிட்டுள்ளது:-

> "3. In view of the above, the petitioner is directed to submit a fresh application for water connection within fifteen days from the date of receipt of a copy of this order and on such application being made, the respondent will consider the same and pass appropriate orders on merits and in accordance with law within a period of one month thereafter"

மனுதாரர் குடிநீர் இணைப்பிற்கு முன்வைப்புத் தொகையாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) செலுத்துச் சீட்டு எண்.204 நாள் 05.10.2017 அன்றும், சென்டேஜ் கட்டணமாக ரூ.2,700/–ஐ (ரூபாய் இரண்டாயிரத்து எழுநூறு மட்டும்) செலுத்துச் சீட்டு எண்.213 நாள் 09.10.2017 அன்றும் செலுத்தியுள்ளதாக நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது 22.9.2021 நாளிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி கட்டணங்களை மனுதாரரிடமிருந்து நெய்க்காரப்பட்டி பேரூராட்சி பெற்றுக்கொண்டுள்ளதால், அவரது குடியிருப்பிற்கு குடிநீர் இணைப்பு வழங்கியிருக்கவேண்டும். மாறாக, மனுதாரர் தமது குடியிருப்பிற்கு முறையாக சொத்துவரி செலுத்திவரும் நிலையிலும், குடிநீர் இணைப்பு கோரி விண்ணப்பித்து அதற்கான கட்டணங்களை முறையாக செலுத்திய பின்னரும் பத்து வருடங்களாக போராடி வருவது மிகவும் வருந்தத்தக்கது. முறையாக விண்ணப்பித்து, அதற்கான கட்டணங்களைப் பெற்றுக்கொண்டபின்னரும், மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படாமல் தாமதித்துள்ளது மனிதாபிமான செயல் அல்ல. மேலும், முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்ததற்குப் பின்னர் அப்புகார் மனு குறித்து நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 9.8.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில், நெய்க்காரப்பட்டி பேரூராட்சியில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக பேரூராட்சிக்குட்பட்ட கே. வேலூர் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நத்தம் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி நடைபெற்றுவருகிறது என்றும், மேற்படி பணி முடிவுற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணி பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்தபின்னர், முன்னுரிமை அடிப்படையில் மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். ஆனால், 23.09.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜரான பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்துடன் அளித்துள்ள 22.09.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரது குடியிருப்பிற்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு முன்னாள் செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொண்டபோது, அங்குள்ள சிலரால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டதாகவும், சட்டம் ஒழுங்கு பிரச்சனையைக் கருத்திற்கொண்டு மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு கூற்றுக்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையவைகளாக உள்ளன. இது இந்நடுவத்தையே ஏமாற்றி வழிதவறிச் செல்ல (mislead) ஏதுவாக செய்த முயற்சி என்று கண்டிக்கப்படுகிறது. மனுதாரர் தமது புகார் மனுவில் தனக்கு குடிநீர் இணைப்பு வழங்காமல், கையூட்டு பெற்றுக்கொண்டு 20 நபர்களுக்குமேல் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கியுள்ளனர் என்றும், ஒரு வீட்டிற்கு இரண்டு குடிநீர் குழாய் இணைப்பு என 30 வீடுகளுக்குமேல் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரரது இப்புகார் குறித்து பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது விளக்க அறிக்கையிலோ அல்லது நேரடி விசாரணையின் போது அளித்துள்ள வாக்குமூலத்திலோ அல்லது வாக்குமூலத்துடன் அளித்துள்ள அறிக்கையிலோ தமது தரப்பிலான விளக்கத்தினை அளிக்கவில்லை. இது மேலும் அய்யப்பாடுகளை எழுப்புகிறது. ஒளிமறைவற்ற தன்மை (Transparency) இல்லை என்றே கருதப்படுகிறது. மேலும், மனுதாரரது மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு குடிநீர் இணைப்பு வழங்குமாறு பல்வேறுதரப்பிலிருந்தும் பரிந்துரைக் கடிதங்கள் அளித்தும், மனுதாரருக்கு இதுவரை குடிநீர் இணைப்பு வழங்காதது வேண்டுமென்றே மனுதாரரின் கோரிக்கையை அலட்சியம் செய்ததாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்காமல் சட்டம் ஒழுங்கு பிரச்சனையையும் நத்தம் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தையும் காரணம்காட்டி பல ஆண்டுகள் காலதாமதம் செய்துள்ள செயலுக்குப் பொறுப்பான நெய்க்காரப்பட்டி

பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் இச்செயலுக்குக் காரணமானவர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கை குறித்த விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது. மனுதாரர் குடியிருப்பிற்கு உடனடியாக குடிநீர் இணைப்பு வழங்கிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

2021ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. D. பால்கிருபாகரன்,
த/பெ. தன்ராஜ், கதவு எண்.2F. ஜீவவழி சர்ச், பழனி மெயின் ரோடு,
நெய்க்ககரபட்டி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்–624 615

செயல் அலுவலர், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி,
நெய்க்காரப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்–624 615

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (கவரில் பெயரிட்டு)

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்